**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம்</u>**

**<u>முன்னிலை</u> : திருமதி. கா. ஸ்ரீபதி, B.A., L.L.B.,**

நீதித்துறை நடுவர், வாணியம்பாடி.

2026ம் ஆண்டு மே மாதம் 14 ஆம் நாள் வியாழன்கிழமை

**<u>சுருக்குமுறை விசாரணை வழக்கு எண்.222/2017.</u>**

<u>சி.என்.ஆர். எண்.TNTU09-000069-2017</u>

| வரிசை எண். | விளக்கம் | விவரங்கள் |
|---|---|---|
| 1. | குற்றமுறையிடுபவர் | P.N. நியு ஆரணி அரிசி மண்டி சார்பாக அதன் உரிமையாளர், A.பாவேந்தன், வயது-45 த/பெ. அப்பாகுட்டி, எண்.886/A, வாரச்சந்தை சாலை, வாணியம்பாடி தாலுக்கா, திருப்பத்தூர் மாவட்டம். |
| 2. | எதிரி | R.U.செந்தில்நாதன் த/பெ. R.உமாபதி உரிமையாளர், துர்கா டிரேடர்ஸ், எண்.86, M.S.M தெரு, பழைய வாணியம்பாடி, தேவஸ்தானம், வாணியம்பாடி தாலுக்கா, திருப்பத்தூர் மாவட்டம். |
| 3. | குற்றம் | 138 NI ACT |
| 4. | சம்பவம் நடந்த தேதி | 01.09.2014 |
| 5. | முதல் தகவல் அறிக்கை பதிவு/முறையீடு செய்யப்பட்ட நாள் | 12.12.2016 |
| 6. | எதிரி கைது செய்யப்பட்ட நாள் மற்றும் பிணையில் சென்ற விபரம் மற்றும் நாள் | - |
| 7. | குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | - |
| 8. | கு.வி.மு.ச.பிரிவு 138-ன் கீழ் குற்றம் குறித்து வினவப்பட்ட நாள் | 20.06.2024 |
| 9. | கு.வி.மு.ச.பிரிவு 317-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட | - |

| | | |
|---|---|---|
| | மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யபட்ட விவரம் அதன் முடிவுகள். | |
| 10 | வழக்கின் சாட்சி முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் | பு.த.சா.1–02.08.2024, 12.12.2024 |
| 11 | எதிரிகளிடம் குற்றம் குறித்து கு.வி.மு.ச.313(1) (பி)–ன் கீழ் வினவிய நாள் | 28.03.2025 |
| 12 | எதிரி மீது பிடியாணை வழங்கப்பட்ட நாள் மற்றும் திரும்ப பெறப்பட்ட நாள் | 18.11.2025–14.05.2026 |
| 13 | தீர்ப்பு பகரப்பட்ட நாள் | 14.05.2026 |
| 14 | தீர்வு | கு.வி.மு.ச.பிரிவு 255(2)ன் கீழ் தண்டனை |

<u>**நீதித்துறை படிவம் எண். 61**</u>

புகார்தாரர் : P.N. நியு ஆரணி அரிசி மண்டி சார்பாக அதன் உரிமையாளர்,

A.பாவேந்தன் த/பெ. அப்பாகுட்டி.

எதிரி : R.U.செந்தில்நாதன் த/பெ. R.உமாபதி, உரிமையாளர், துர்கா டிரேடர்ஸ்.

குற்றம் : 138 NI ACT

முடிவு : கு.வி.மு.ச பிரிவு 255 (2) ன் கீழ் தண்டனை

தண்டனை: முடிவாக, குற்றஞ்சாட்டப்பட்டவர் மாற்றுமுறை ஆவண சட்ட பிரிவு 138 ன் கீழ் குற்றவாளி என தீர்மானிக்கபட்டு, மேற்படி குற்றத்திற்கு மூன்று மாத காலம் மெய்க்காவல் சிறை தண்டனை குற்றஞ்சாட்டபட்டவர் அனுபவிக்க வேண்டும் என்றும், குற்றஞ்சாட்டபட்டவர் (காசோலை தொகை ரூ.5,00,000 + செலவுத் தொகை ரூ.10,000) மொத்தம் ரூ.5,10,000/– குற்றமுறையீட்டாளருக்கு நஷ்டயீடாக கு.வி.மு.ச 357(3) ன் கீழ் ஒரு மாதத்திற்குள் செலுத்த வேண்டுமென்றும், தவறும் பட்சத்தில், மேலும், 2 மாதங்கள் மெய்க்காவல் சிறை தண்டனை குற்றஞ்சாட்டபட்டவர் அனுபவிக்க வேண்டுமென்று கு.வி.மு.ச பிரிவு 255 (2) ன் கீழ் தண்டித்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கப்படுகிறது.

| வரிசை எண் | எதிரியின் பெயர் | தந்தை/ கணவர் பெயர் | சாதி (அ) இனம் | தொழில் | முகவரி | வயது |
|---|---|---|---|---|---|---|
| 1. | R.U.செந்தில்நாதன் உரிமையாளர், துர்கா டிரேடர்ஸ் | R.உமாபதி | – | வியாபாரம் | எண்.86, M.S.M தெரு, பழைய வாணியம்பாடி, தேவஸ்தானம், வாணியம்பாடி தாலுக்கா, திருப்பத்தூர் மாவட்டம். தாலுக்கா, திருப்பத்தூர் மாவட்டம். | – |

| **தேதி** | | | | | | | தாமதம் (ம) அதன் விளக்கம். |
|---|---|---|---|---|---|---|---|
| குற்றம் | புகார் அறிக்கை | எதிரி கைது செய்யப்பட்ட நாள் | பிணையில் சென்ற நாள் | வழக்கு விசாரணையின் தொடக்கம் | வழக்கு விசாரணையின் முடிவு | உத்தரவு | எதிரியின் மீது பிடியாணை நிலுவையில் இருந்தது. |
| 01.09.14 | 12.12.16 | - | - | 20.06.24 | 14.07.25 | 14.05.26 | |

இவ்வழக்கு கடந்த 15.03.2017 ஆம் தேதியன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு இறுதியாக 14.07.2025 அன்று விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு குற்றமுறையிடுபவர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.K.உமர், M.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர்கள் திருமதி.M.சூர்யவர்ஷினி, B.A., B.L மற்றும் திரு.P.சுரேந்தர்., B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இது நாள் வரையில் பரிசீலனையில் இருந்து வந்து, வழக்கின் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**தீர்ப்புரை**

இவ்வழக்கு குற்றமுறையீட்டாளர் குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக பிரிவு 138 மற்றும் 141 மாற்றுமுறை ஆவணச் சட்டம் படி தண்டிக்க கோரி கு.வி.மு.ச பிரிவு 200 ன் கீழ் தனிநபர் குற்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. வழக்கின் சுருக்கம்**

குற்றமுறையீட்டாளருக்கு குற்றம்சாட்டப்பட்டவர் வியாபாரரீதியில் நன்கு அறிமுகம் என்ற முறையில், கடந்த 28.05.2012 ம் தேதி முடிய ரூ.55,00,000/- பின்னிட்டு 2014 பிப்ரவரி முதல் 04.05.2014 தேதி முடிய சுமார் ரூ.28,00,000/-மும் பாக்கி வைத்துள்ளதாகவும், நீங்களாக தனிப்பட்ட முறையில் ரூ.4,00,000/- என மொத்தமாக ரூ.86,00,000/-க்கு மேல் செலுத்த வேண்டிய பாக்கியுள்ளதாகவும், பாக்கி தொகையில் பகுதி தொகைகளை செலுத்தும் விதமாக ரூ.5,00,000/-க்கு 10 காசோலைகளும், ரூ.3,08,530/-க்கு ஒரு காசோலையும் என மொத்தமாக 11 காசோலைகளை பூர்த்தி செய்து கையெழுத்திட்டு வழங்கியதாகவும், 08.09.2014 தேதி முதல் 03.10.2014 தேதி வரையில் பணமாக்கி கொள்ளும் வகையில் காசோலைகளை 01.09.2014 தேதியில் குற்றமுறையிடுபவரிடம் அவரின் மனு கடையில் வைத்து குற்றம்சாட்டப்பட்டவர் சாட்சிகள் முன்னிலையில் வழங்கியதாகவும், குற்றம்சாட்டப்பட்டவர் குற்றமுறையிடுபவரை ஏமாற்றி பணத்தை திருப்பி செலுத்துவதிலிருந்து காலதாமதப்படுத்தவும், தவறான சங்கதிகளுடன் கூடிய அறிவிப்பினை 04.09.2014 தேதியில் தன்னுடைய வழக்கறிஞர் மூலம் அனுப்பியதாகவும், இது குறித்து கேட்டதற்கு குற்றம்சாட்டப்பட்டவர் தனக்கு வரவேண்டிய பணம் உடனடியாக வராத நிலையில் ஒரு மாத கால அவகாசம் கேட்பதற்காக அப்படிப்பட்ட அறிவிப்பினை அனுப்பியதாகவும், ஒரு மாதத்திற்குள் பணத்தை செலுத்தி மொத்த காசோலைகளையும் திரும்ப பெற்றுக்கொள்வதாகவும், நிலுவைத்தொகையினை பிறகு செலுத்தி தீர்ப்பதாகவும் கூறியதாகவும், ஆனால் ஒரு மாதத்திற்குள் பணத்தை திரும்ப செலுத்தாததால் 18.10.2014ம் தேதி உரிய பதில் அறிவிப்பு அனுப்பப்பட்டதாகவும், 16.10.2014ம் தேதி 10.09.2014ம் தேதியிட்ட 503189 என்ற எண் கொண்ட பகுதி பாக்கித்தொகை ரூ.5,00,000/-ற்கான திருப்பத்தூர் கரூர் வைசியா வங்கி கிளைக்கான காசோலையை பணமாக்க தன்னுடைய வங்கிக்கணக்குள்ள கரூர் வைசியா வங்கி, வாணியம்பாடி கிளையில் வசூலுக்கு போட்டபோது குற்றம் சாட்டப்பட்டவருடைய கணக்கில் போதிய இருப்பு இல்லை (Funds

Insufficient) என்று 17.10.2014ம் தேதி பெற்றுக்கொண்டதாகவும், இது குறித்து 17.10.2014 ம் தேதி அன்று காசோலை பணத்தை திரும்ப செலுத்தும்படி சட்ட அறிவிப்பு அனுப்பியதாகவும், ஆனால் இன்றைய தேதி வரை குற்றம்சாட்டப்பட்டவர் எந்தவிதமான பதிலும் அளிக்கவில்லை, காசோலை தொகையும் கொடுக்கவில்லை என்றும் குற்றம்சாட்டப்பட்டவர் மீது மாற்று முறை ஆவணச் சட்டம், பிரிவு 138 ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்ததாக குற்றமுறையீட்டாளார் தனிநபர் குற்ற வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

2. இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர் நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு வழங்கப்பட வேண்டிய வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் கு.வி.மு.ச பிரிவு. 204ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டன. வழக்கின் புகார் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்ததில் இவ்வழக்கிற்கான அடிப்படை முகாந்திரம் இருந்ததால் இந்த நீதிமன்றம் போதிய கால அவகாசம் வழங்கிய பின்னர் குற்றஞ்சாட்டப்பட்டவர்களிடம் 1881 ஆம் ஆண்டு மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138 ன் கீழ் குற்றம் குறித்து வினாவிய போது குற்றஞ்சாட்டப்பட்டவர் பொய் வழக்கு, குற்றவாளி இல்லை எனவும் தெரிவித்தார்.

3. எனவே, குற்றமுறையீட்டாளர் தரப்பு வழக்கினை நிரூபிக்க சாட்சியங்கள் அழைக்கப்பட்டது. குற்றமுறையீட்டாளர் தரப்பில் குற்றமுறையீட்டாளர் சாட்சி பு.த.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, பு.த.சா.ஆ.1 முதல் பு.த.சா.ஆ.4 வரையிலான சான்றாவணங்கள் குற்றமுறையீட்டாளர் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

4) குற்றமுறையீட்டாளர் சாட்சியத்தின் சுருக்கம்:–

பு.த.சா.1 குற்றமுறையிடுபவரான பாவேந்தன் தனது சாட்சியத்தில், புகாரில் கூறியுள்ள சங்கதிகளையே நீதிமன்ற சாட்சியத்திலும் கூறியிருக்கிறார். மேலும் 10.09.2014 தேதி திருப்பத்தூர் கிளை, கரூர் வைசியா வங்கியின் 503189 என்ற எண்ணுள்ள

ரூ.5,00,000/−க்கான காசோலை அசல் பு.த.சா.ஆ.1 என்றும், 18.10.2014 தேதி கரூர் வைசியா வங்கி, வாணியம்பாடி கிளை அளித்த ரிட்டன் மெமோ பு.த.சா.ஆ.2 என்றும், 21.11.2014ம் தேதியிட்ட குற்றம்முறையிடுபவர் குற்றம் சாட்டப்பட்டவருக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு பு.த.சா.ஆ.3 என்றும், 24.11.2014ம் தேதியிட்ட எதிரி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அலுவலகம் சார்ந்த அஞ்சல் ஒப்புகை அட்டை பு.த.சா.ஆ.4 என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

5. இவ்வழக்கில் கு.வி.மு.ச பிரிவு 313(1)(பி) ன் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிரான சாட்சியங்களை குறித்து கேள்வி கேட்டபோது, குற்றஞ்சாட்டப்பட்டவர் அதனை பொய் சாட்சி, எங்கள் தரப்பில் சாட்சிகள் உண்டு எனவும் கூறியுள்ளார். இவ்வழக்கில் குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் சாட்சிகளை விசாரிக்க போதிய அவகாசம் கொடுத்தும், சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யாததால், குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. குற்றமுறையிடுபவர் தரப்பில் 10.06.2025ம் அன்றும், குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் 12.09.2025ம் தேதி வாதங்கள் முன்வைக்கப்பட்டன. சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில் இந்நீதிமன்றம் இவ்வழக்கை தீர்மானிக்கிறது.

6. தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனைகள்

1. இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவு 138ன் கீழ் குற்றம்சாட்டப்பட்டுள்ளதா?

2. குற்றம்சாட்டப்பட்டவர்கள் மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவு 118 மற்றும் 139ன் கீழ் அனுமானத்தை மறுத்து அவர் தரப்பு சாட்சியத்தை முன்வைத்துள்ளாரா?

3. இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவு 138ன் கீழ் குற்றம்சாட்டப்பட்டுள்ளதா?

இவ்வழக்கில் மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவு 138ன் கீழ் குற்றத்தை உருவாக்க பின்வரும் கூறுகள் இருக்க வேண்டும்.

அ. புகார்தாரருக்கு ஆதரவாக குற்றம்சாட்டப்பட்டவரால் காசோலை கொடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

ஆ. சட்டப்பூர்வமான கடன் அல்லது பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக குற்றம்சாட்டப்பட்டவரால் காசோலை வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

இ. காசோலை கொடுக்கப்பட்ட தேதியிலிருந்து 3 மாதங்களுக்கும் அல்லது அதன் செல்லுபடியாகும் காலத்திற்குள் வங்கியில் சமர்பிக்கப்பட வேண்டும்.

ஈ. காசோலை வங்கியால் திருப்பப்பட்டிருக்க வேண்டும்.

உ. காசோலை திருப்பப்பட்ட தகவல் கிடைத்த 30 நாட்களுக்குள் பணம் பெறுபவர் அல்லது வைத்திருப்பவர் காசோலை கொடுத்தவருக்கு எழுத்துபூர்வமாக ஒரு அறிவிப்பை வழங்கி காசோலையை கொடுத்தவர் அந்த தொகையை செலுத்த வேண்டும் என கோரிக்கை வைத்திருக்க வேண்டும் .

ஊ. சட்டபூர்வ அறிவிப்பு கிடைத்த நாளிலிருந்து 15 நாட்களுக்குள் காசோலையை கொடுத்தவர் காசோலை தொகையை செலுத்த தவறியிருக்க வேண்டும்.

எ. புகார்தாரரர் அந்த 15 நாட்கள் காலாவதியானதிலிருந்து 1 மாதத்திற்குள் நீதிமன்றத்தை அணுகியிருக்க வேண்டும்.

மேலே கூறப்பட்ட கூறுகள் திருப்தி அடைந்தால் மாற்றுமுறை ஆவண சட்டம் பிரிவு 118 மற்றும் 139ன் கீழ் உள்ள அனுமானங்கள் நடைமுறைக்கு வரும்.

7. குற்றமுறையிடுபவர் தரப்பு சாட்சியத்தின் சுருக்கம்:–

7(i). இவ்வழக்கில் குற்றமுறையிடுபவர் பு.த.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு அவர் மூலம் பு.த.சா.ஆ.1 முதல் பு.த.சா.ஆ.4 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பு.த.சா.ஆ.1 10.09.2014 தேதி திருப்பத்தூர் கிளை, கரூர் வைசியா வங்கியின் 503189 என்ற எண்ணுள்ள ரூ.5,00,000/–க்கான காசோலை அசல் பற்றியதாகும், பு.த.சா.ஆ.2 18.10.2014 தேதி கரூர் வைசியா வங்கி, வாணியம்பாடி கிளை அளித்த ரிட்டன் மெமோவில் காரணம் போதிய பணம் இல்லை (Funds Insufficient) என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பு.த.சா.ஆ.3 21.11.2014ம் தேதியிட்ட குற்றம்முறையிடுபவர் குற்றம் சாட்டப்பட்டவருக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு பற்றியதாகும். பு.த.சா.ஆ.4 24.11.2014ம் தேதியிட்ட குற்றம்சாட்டப்பட்டவர் புகார்தாரரின் வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக் கொண்டதற்கான அலுவலகம் சார்ந்த அஞ்சல் ஒப்புகை அட்டை பற்றியதாகும்.

7(ii). ஆவணங்களை பரிசீலனை செய்து பார்க்கும்போது புகார்தாரர் 715 நாட்கள் காலதாமதமாக 142(1)(b) NI Act r/w பிரிவு 5 காலவரையறை சட்டம் படிக்கான மனு தாக்கல் செய்யப்பட்டு அம்மனு அனுமதிக்கப்பட்டு வழக்குகோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. மேலும், புகார்தாரருக்கு காசோலை வழங்கப்பட்டுள்ளது என்றும், அது போதிய பணம் இல்லை என்று திருப்பப்பட்டது என்றும், பின் புகார்தாரர் சட்டபூர்வ அறிவிப்பை குற்றம்சாட்டப்பட்டவருக்கு அனுப்பியுள்ளார் என்றும், குற்றம்சாட்டப்பட்டவர் சட்ட அறிவிப்பை பெற்ற நாளிலிருந்து 30 நாள்களுக்குள் பணத்தை செலுத்தவில்லை எனவும், அதனால் தான் குற்றமுறையிடுபவர் குற்றம்சாட்டப்பட்டவருக்கு எதிராக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. மேலும், மாற்றுமுறை ஆவண சட்டம் பிரிவு 138

பிரிவின் கீழ் உள்ள கூறுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என இதன் மூலம் இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய முதல் பிரச்சனைக்கு தீர்வு காண்கிறது.

7(iii). மேலும், அவரது குறுக்கு விசாரணையில் நான் இந்த வழக்கிற்காக தாக்கல் செய்துள்ள புகாரிலும், முதன்மை விசாரணை வாக்குமூலத்திலும் நான் என்ன வேலை செய்கிறேன் என குறிப்பிட்டுள்ளேன் என்றால் அரிசி வியாபாரம் செய்கிறேன் என குறிப்பிட்டுள்ளேன் என்றும், புகாரிலும் முதன்மை விசாரணை வாக்குமூலத்திலும் எதிரியை எவ்வாறு தெரியும் என குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன் என்றும், முதன்மை விசாரணை வாக்குமூலத்தில் எந்த தேதியிலிருந்து எந்த தேதி வரையிலான வியாபாரத்திற்காக எதிரி பணம் கொடுக்க வேண்டும் என்ற விவரத்தை குறிப்பிட்டுள்ளேனா என்றால் 2012ம் வருடத்திலிருந்து 2014ம் வருடம் வரையிலான காலத்திற்கு பணம் கொடுக்க வேண்டும் என்றும், நான் என்ன வகையான அரிசி வியாபாரம் செய்கிறேன் என்றால் அரிசி மொத்த விற்பனை மண்டி வைத்துள்ளேன் என்றும், 28.05.2012ம் தேதி வரை ரூ.55,00,000/-ற்கு எதிரி என்னிடம் 5 மாதத்தில் அவ்வளவு தொகைக்கு வியாபாரம் செய்தாரா என்றால் செய்தார் என்றும், செய்துவிட்டு காசோலை கொடுத்தார் என்றும், எந்த தேதியில் காசோலை கொடுத்தார் என்றால் 16.10.2014ம் தேதி கொடுத்தார் என்றும், ரூ.55,00,000/- என்பது ஒரே நேரத்தில் செய்யப்பட்ட வியாபாரமா அல்லது அவ்வப்போது செய்யப்பட்ட துண்டு வியாபாரத்தின் மொத்த தொகையா என்றால் ஒரு மாதத்தில் அவருக்கு கொடுத்த அரிசிக்குண்டான தொகை தான் ரூ.55,00,000/-. ஏற்கனவே கொடுத்த அரிசிக்குண்டான பணத்தை பெறாமலேயே தொடர்ச்சியாக எதிரிக்கு எவ்வாறு அரிசி வழங்கி வந்தேன் என்றால் அவர் காசோலையை கொடுத்ததால் தொடர்ந்து வழங்கி வந்தேன் என்றும், காசோலையை ஒரே நாளில் கொடுத்தாரா அல்லது வெவ்வேறு நாள்களில் கொடுத்தாரா என்றால் ஒரே நாளில் தான் கொடுத்தார் என்றும், எதிரி காசோலை கொடுத்த பின்பு 04.09.2014ல் கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பில் என்ன கூறியிருந்தார் என்றால் அதில் என்ன கூறியிருந்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது, எனது வழக்கறிஞருக்கு தான் தெரியும் என்றும், அந்த அறிவிப்பில் எதிரி அவரது துர்கா

டிரேடர்ஸ்—ஐ கலைத்து விட்டதாகவும், அதனால் அவர் எனக்கு அளித்த காசோலைகளை திரும்ப அவரிடமே கொடுத்துவிட வேண்டும் என்று சொல்லியும் அறிவிப்பை அனுப்பியிருந்தார் என்றாலும், அதனால் தான் என்னிடமிருந்த எதிரியின் காசோலைகளை நானே நிரப்பி வசூலுக்கு செலுத்தி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல என்றும், எதிரியுடன் நான் ஏற்கனவே வியாபாரம் செய்து வந்ததால் அவருடைய கையொப்பம் எனக்கு நன்கு தெரியும் என்பதால் அதே போன்று அவருடைய கையொப்பத்தை காசோலைகளில் இட்டுள்ளேன் என்றால் சரியல்ல என்றும், எதிரி தான் என் எதிரில் காசோலைகளில் கையொப்பமிட்டு கொடுத்தார் என்றும், காசோலைக்கான வங்கி கணக்கு எதிரியின் தனிப்பட்ட வங்கிக்கணக்கா அல்லது துர்கா டிரேடர்ஸின் வங்கிக்கணக்கா என்றால் துர்கா டிரேடர்ஸின் வங்கிக்கணக்கு என்றும், 3ம் மாதத்தில் 2014ம் வருடம் துர்கா டிரேடர்ஸ் கலைக்கப்பட்டதால் தான் காசோலை திருப்பப்பட்டது என்றால் சரியல்ல என்றும், எதிரி மீது தொடர்ந்துள்ள அனைத்து வழக்கிலும் எதிரி ரூ.86,00,000/— தர வேண்டும் என கூறிவிட்டு ஒவ்வொரு வழக்கிலும் ரூ.5,00,000/—ற்று தனித்தனியாக வழக்கு தாக்கல் செய்துள்ளதால் இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல என்றும், எதிரி தனியாக ரூ.4,00,000/— கொடுக்க வேண்டும் என குறிப்பிட்டுள்ளேன், அது என்ன பணம் என்றால் எதிரி என்னிடம் கைமாற்று கடனாக வாங்கியிருந்தார் என்றும், ரூ.86,00,000/— எதிரி எனக்கு கொடுக்க வேண்டும் என்றால் ஒரே காசோலையாக கொடுத்திருப்பார், இவ்வாறு தனித்தனி காசோலைகளாக கொடுத்திருக்கமாட்டார் என்றால் சரியல்ல என்றும், நான் 2014ல் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிவிட்டு 2017ல் வழக்கு தாக்கல் செய்துவிட்டு எதிரி ஊரிலேயே இல்லை, நிறுவனமும் கலைக்கப்பட்டு விட்டது, பணம் பறிக்கும் நோக்கத்தோடு நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல என்றும், எதிரி வியாபாரத்தை நிறுத்திவிட்டார் என கூறுவது தவறு. " என சாட்சியமளித்துள்ளார்.

இத்துடன் குற்றமுறையிடுபவர் தரப்பு சாட்சியங்கள் முடித்து வைக்கப்பட்டுள்ளது.

7(iv). குற்றம்சாட்டப்பட்டவர் மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவு 118 மற்றும் 139ன் கீழ் அனுமானத்தை மறுத்து அவர் தரப்பு சாட்சியத்தை முன்வைத்துள்ளாரா?

மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவு 138ன் கீழ் குற்றங்களுக்கான வழக்குகளில் நிரூபிக்கும் சுமை குற்றம்சாட்டப்பட்டவர் மீது உள்ளது. மாண்புமிகு உச்சநீதிமன்ற வழக்கான பசலிங்கப்பா எதிர் முதிபசப்பா (2019) 6 SCR 555 118 மற்றும் 139 அனுமானங்கள் குறித்த கொள்கைகளை சுருக்கமாக கூறுகிறது.

மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவு 118a மற்றும் 139 ன் அனுமானங்கள் பின்வருமாறு:

அ. மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவு 139 ஆனது காசோலை ஏதேனும் கடன் அல்லது பிற பொறுப்பை நிறைவேற்றுவதற்காக கொடுத்திருக்க வேண்டும் என்ற அனுமானத்தை கட்டாயமாக்குகிறது.

ஆ. பிரிவு 139ன் கீழ் உள்ள அனுமானமானது மறுக்கத்தக்க அனுமானமாகும். சாத்தியமான வாதத்தை எழுப்பும் பொறுப்பு குற்றம்சாட்டப்பட்டவரின் மீது உள்ளது. அனுமானத்தை மறுப்பதற்கான சாட்சியத்தின் தரநிலை நிகழ்தகவுகளின் அதிகளவு (preponderance of Probabilities) ஆகும்.

(i) இவ்வழக்கில் குற்றம்சாட்டப்பட்டவர் மாற்றுமுறை ஆவண சட்டப்பிரிவு 118(a) மற்றும் 139 ன் கீழ் உள்ள அனுமானங்களை மாற்றுமுறை ஆவண சட்டத்தின் படி மறுத்துள்ளார்களா என்பதை பரிசீலனை செய்து பார்க்கும்போது குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் யாரும் விசாரிக்கப்படவில்லை. குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் சான்றாவணம் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

8. இரு தரப்பும் கேட்கப்பட்டு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

9. குற்றமுறையீட்டாளர் சார்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் குற்றஞ்சாட்டப்பட்டவர் மீது மாற்றுமுறை ஆவண சட்டப் பிரிவு 138 ன் கீழான ஆக்கக்கூறுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டிருப்பதாகவும், வழக்கு காசோலைக்குண்டான பணம் தர மறுக்கப்பட்டதிலிருந்து குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு 30 நாட்களுக்குள் அறிவிப்பு செய்ததாகவும், குற்றஞ்சாட்டப்பட்டவர் அறிவிப்பை பெற்றுக்கொண்டு காசோலைக்குண்டான பணத்தை குற்றஞ்சாட்டப்பட்டவர் செலுத்தவில்லை, பதில் அறிவிப்பு ஏதும் தராமல் இருந்ததாகவும், எனவே குற்றமுறையீட்டாளர் கால தாமதத்திற்கான மனுவுடன் இவ்வழக்கு தாக்கல் செய்திருப்பதாகவும், இந்த காசோலை மோசடி வழக்கு என்பது எதிரி செய்த குற்றத்திற்கு தண்டனை கோரும் வழக்கு என்ற வகையில் நிலைக்கத்தக்கதாகிறது. எனவே, குற்றமுறையீட்டாளர் தரப்பில் முறையான சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் குற்றஞ்சாட்டப்பட்டவர் மீது சாட்டப்பட்ட 1881 ம் ஆண்டு மாற்று முறை ஆவணச் சட்டம் பிரிவு 138 ன் கீழான குற்றத்திற்கான ஆக்கக்கூறுகள் அனைத்தும் குற்றமுறையீட்டாளர் தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டிருப்பதனால், இக்குற்றத்திற்கு குற்றஞ்சாட்டப்பட்டவரை தண்டித்தும் காசோலைக்குண்டான பணத்தை திருப்பி குற்றமுறையீட்டாளருக்கு வழங்கி உத்தரவிட வேண்டும் என வாதிடப்பட்டுள்ளது.

10. இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் குற்றமுறையீட்டாளர் தரப்பில் குற்றஞ்சாட்டப்பட்டவர் மீது பொய்யான வழக்கு தாக்கல் செய்திருப்பதாகவும், இந்த வழக்கின் காசோலையை எதிரி கொடுக்கவில்லை என்றும், எதிரியின் கையொப்பத்தை மோசடியாக இட்டு பணம் பறிக்கும் நோக்கில் இவ்வழக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், 16.10.2014ம் தேதி காசோலை கொடுத்தார் என தேதி மாற்றி கூறியுள்ளார் என்பதனை நீதிமன்றம் கருத்தில் கொள்ள வேண்டும் எனவும், எனவே, இவ்வழக்கை தள்ளுபடி செய்து எதிரியை விடுதலை செய்யவேண்டும் என்றும், அந்த சந்தேகத்தின் பலனை குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு

அனுகூலமாக வழங்கி, இவ்வழக்கில் இருந்து விடுதலை செய்து உத்தரவிட வேண்டுமென வாதிட்டார்.

11. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால், குற்றமுறையீட்டாளர் தரப்பில் குற்றஞ்சாட்டப்பட்டவர் மீது சாட்டப்பட்டுள்ள மாற்றுமுறை ஆவணச்சட்ட பிரிவு 138 ன் கீழான குற்றமானது சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதாகும்.

12. இவ்வழக்கின் குற்றமுறையிடுபவரான பாவேந்தன் என்பவரிடமிருந்து குற்றம்சாட்டப்பட்டவர் வியாபார வகையில் கடந்த 28.05.2012 ம் தேதி முடிய ரூ.55,00,000/– பின்னிட்டு 2014 பிப்ரவரி முதல் 04.05.2014 தேதி முடிய சுமார் ரூ.28,00,000/–மும் பாக்கி வைத்துள்ளதாகவும், குற்றம்சாட்டப்பட்டவர் தனிப்பட்ட முறையில் ரூ.4,00,000/– என மொத்தமாக ரூ.86,00,000/–க்கு மேல் செலுத்த வேண்டிய பாக்கியுள்ளதாகவும், மேற்படி கடன் தொகைக்கு ஆதரவாக 10.09.2014 தேதியிட்டு ரூ.5,00,000/–க்கான குற்றம் சாட்டப்பட்டவருடைய வங்கிக்கணக்கு உள்ள திருப்பத்தூர் கிளை, கரூர் வைசியா வங்கியின் 503189 என்ற எண்ணுள்ள காசோலையை பூர்த்தி செய்து கொடுத்தாகவும், மேற்படி காசோலையை குற்றமுறையீட்டாளர் அவருடைய வங்கிக்கணக்குள்ள கரூர் வைசியா வங்கி, வாணியம்பாடி கிளையில் 16.10.2014 ம் தேதி அன்று வசூலுக்கு போட்டபோது குற்றம் சாட்டப்பட்டவருடைய கணக்கில் போதிய பணம் இல்லை (Funds Insufficient) என்று மெமோவுடன் திருப்பப்பட்டதாகவும், இது குறித்து 21.11.2014 ம் தேதி அன்று காசோலை பணத்தைதிரும்ப செலுத்தும்படி சட்ட அறிவிப்பு அனுப்பியதாகவும், 24.11.2014ம் தேதி குற்றம்சாட்டப்பட்டவர் புகார்தாரரின் வழக்கறிஞர் அறிவிப்பை அலுவலகம் சார்ந்த முகவரியில் பெற்றுக்கொண்டதாகவும், ஆனால் இன்றைய தேதி வரை குற்றம்சாட்டப்பட்டவர் எந்தவிதமான பதிலும் அளிக்கவில்லை காசோலை தொகையும் கொடுக்கவில்லை என்பதும், மேலும், 10.09.2014 தேதி திருப்பத்தூர் கிளை, கரூர் வைசியா வங்கியின் 503189 என்ற எண்ணுள்ள ரூ.5,00,000/–க்கான காசோலை

அசல் பு.த.சா.ஆ.1 என்றும், 18.10.2014 தேதி கரூர் வைசியா வங்கி, வாணியம்பாடி கிளை அளித்த ரிட்டன் மெமோ பு.த.சா.ஆ.2 என்பதும், 21.11.2014ம் தேதியிட்ட குற்றம்முறையிடுபவர் குற்றம் சாட்டப்பட்டவருக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு பு.த.சா.ஆ.3 என்பதும், 24.11.2014ம் தேதியிட்ட குற்றம்சாட்டப்பட்டவர் புகார்தாரரின் வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக் கொண்டதற்கான அலுவலகம் சார்ந்த அஞ்சல் ஒப்புகை அட்டை பு.த.சா.ஆ.4 என்பதும், எனவே குற்றமுறையீட்டாளர் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு எதிராக வழக்கு தொடுத்திருக்கிறார் என்பதும், குற்றமுறையீட்டாளர் தரப்பில் தக்க சாட்சி மற்றும் சான்றாவணங்கள் மூலம் மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 138 கீழான ஆக்கக் கூறுகளை நிரூபித்து உள்ளதாக இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

13(i). குற்றமுறையீட்டாளர் அவரது குறுக்கு விசாரணையின் போது காசோலைக்கான வங்கி கணக்கு எதிரியின் தனிப்பட்ட வங்கிக்கணக்கா அல்லது துர்கா டிரேடர்ஸின் வங்கிக்கணக்கா என்றால் துர்கா டிரேடர்ஸின் வங்கிக்கணக்கு என சாட்சியமளித்துள்ள நிலையில் அதை நிரூபிக்கும் வகையில் 24.09.2014 தேதியிட்ட பு.த.சா.ஆ.1ஐ தாக்கல் செய்துள்ளார். அதை நீதிமன்றம் கூர்ந்து பரிசீலனை செய்ததில் P.N. New Arani Rice Mandy என்ற பெயருக்கு துர்கா டிரேடர்ஸ் நிறுவனத்தின் மூலம் காசோலை வழங்கப்பட்டது நிரூபணமாகிறது. எதிரி கொடுத்த காசோலையானது எதிரி தான் பூர்த்தி செய்து கொடுத்தார் என்றும், 24.09.2014ம் தேதி காசோலையானது கொடுக்கப்பட்டதாகவும், அந்த காசோலையானது கரூர் வைசியா வங்கி, திருப்பத்தூர் கிளையுடையது என்றும் சாட்சியமளித்துள்ள நிலையில் அதை நிரூபிக்கும் வகையில் 22.09.2014ம் தேதியிட்ட பு.த.சா.ஆ.1ஐ தாக்கல் செய்துள்ளார். 16.10.2014ம் தேதி காசோலையை வங்கியில் செலுத்தியதாகவும், அது போதிய பணம் இல்லை என 17.10.2014ம் தேதி திருப்பப்பட்டதாக சாட்சியமளித்துள்ள நிலையில் அதை நிரூபிக்கும் வகையில் 17.10.2014ம் தேதியிட்ட பு.த.சா.ஆ.2ஐ தாக்கல் செய்துள்ளார். 21.11.2014ம் தேதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதாக சாட்சியமளித்துள்ள நிலையில் அதை நிரூபிக்கும் வகையில் 21.11.2014ம் தேதியிட்ட பு.த.சா.ஆ.3ஐ தாக்கல் செய்துள்ளார்.

13(ii). மேலும், எதிரி தரப்பு குறுக்கு விசாரணையின்போது " அரிசி வியாபாரம் செய்வதாகவும், எதிரியும் துர்கா டிரேடர்ஸ் என்ற பெயரில் அரிசி வியாபாரம் செய்வதாகவும் சொல்லியுள்ள நிலையில் அதை நிரூபணம் செய்யும் பொருட்டு பு.த.சா.ஆ.1 ஆனது P.N. New Arani Rice Mandy என்ற பெயரிலும், துர்கா டிரேடர்ஸ் என்ற பெயரிலும் உள்ள நிலையில் முதன்மை சாட்சியத்தில் கூறியது போல எதிரிக்கும் புகார்தாரருக்கும் இடையே வியாபார ரீதியாக நல்ல உறவு முறை இருந்துள்ளது என இந்நீதிமன்றம் கருதுகிறது. முதன்மை விசாரணை வாக்குமூலத்தில் எந்த தேதியிலிருந்து எந்த தேதி வரையிலான வியாபாரத்திற்காக எதிரி பணம் கொடுக்க வேண்டும் என்ற விவரத்தை குறிப்பிட்டுள்ளேனா என்றால் 2012ம் வருடத்திலிருந்து 2014ம் வருடம் வரையிலான காலத்திற்கு பணம் கொடுக்க வேண்டும் என்று சாட்சியமளித்துள்ள நிலையில் இவ்வழக்கின் காசோலையானது எதிரிக்கு 2014ம் வருடம் என குறிப்பிட்டு கொடுக்கப்பட்டுள்ளது என்பதால் புகார்தாரர் கூறுவதைபோல 2012லிருந்து 2014ம் வருடம்வரையிலான கடன் தொகைக்காக தான் காசோலை கொடுக்கப்பட்டிருக்கும் என நீதிமன்றம் அனுமானிக்கிறது.எதிரி காசோலை கொடுத்த பின்பு 04.09.2014ல் கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பில் என்ன கூறியிருந்தார் என்றால் அதில் என்ன கூறியிருந்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது, எனது வழக்கறிஞருக்கு தான் தெரியும் என்றும், அந்த அறிவிப்பில் எதிரி அவரது துர்கா டிரேடர்ஸ்–ஐ கலைத்து விட்டதாகவும், அதனால் அவர் எனக்கு அளித்த காசோலைகளை திரும்ப அவரிடமே கொடுத்துவிட வேண்டும் என்று சொல்லியும் அறிவிப்பை அனுப்பியிருந்தார் என்றாலும், அதனால் தான் என்னிடமிருந்த எதிரியின் காசோலைகளை நானே நிரப்பி வசூலுக்கு செலுத்தி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல என்று சாட்சியமளித்துள்ள நிலையில் இவ்வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்து பார்த்தபோது எதிரி தரப்பில் பதிலறிவிப்பு எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்று நீதிமன்றம் கருதுகிறது. மேலும், புகார்தாரரிடம் கேட்கப்பட்ட கேள்விகளே எதிரி அரிசி வியாபாரம் செய்து வந்துள்ளார் எனவும், காசோலைகள் அவரால் தான் கொடுக்கப்பட்டுள்ளது என்று நீதிமன்றம்

அனுமானிக்கிறது. எதிரியின் காசோலைகளை நானே நிரப்பி வசூலுக்கு செலுத்தி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல என்றும், எதிரியுடன் நான் ஏற்கனவே வியாபாரம் செய்து வந்ததால் அவருடைய கையொப்பம் எனக்கு நன்கு தெரியும் என்பதால் அதே போன்று அவருடைய கையொப்பத்தை காசோலைகளில் இட்டுள்ளேன் என்றால் சரியல்ல என்றும் சாட்சியமளித்துள்ள நிலையில் அதனை நிரூபிக்கும் பொருட்டு எதிரி தரப்பில் கையெழுத்து நிபுணருக்கு காசோலையை அனுப்ப எவ்வித முயற்சியும் மேற்கொள்ளவில்லை என்பதாலும், மேலும், இவ்வழக்கின் காசோலையானது எதிரியுடையது தான் என்பதை எதிரி தரப்பிலேயே ஒப்புக்கொண்டுள்ளதால் புகார்தாரர் அவரது தரப்பு வழக்கை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபித்துள்ளார் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

13(iv). இந்த வழக்கின் காசோலையை எதிரி கொடுக்கவில்லை என்றும், எதிரியின் கையொப்பத்தை மோசடியாக இட்டு பணம் பறிக்கும் நோக்கில் இவ்வழக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது புகார்தாரர் பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளதாக வாதம் செய்யப்பட்டுள்ள நிலையில் அதை நிரூபிக்கும் பொருட்டு குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பிலிருந்து எவ்வித சாட்சிகளோ சான்றவணங்களோ தாக்கல் செய்யப்படவில்லை என்றும் நீதிமன்றம் கருதுகிறது. மேலும், 16.10.2014ம் தேதி காசோலை கொடுத்தார் என குறுக்கு விசாரணையில் சொல்லியுள்ள நிலையில் அவர் தேதி மாற்றி கூறியதாகவும், அதனால் பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளார் என வாதிடப்பட்ட நிலையில்

" Human mind is not a Tape recorder. "

என்பது ஒரு உளவியலின் அடிப்படை கொள்கையாகும். உண்மையை கண்டறியும் முயற்சியில் மனிதனின் மனம் ஒரு Tape recorder அல்ல என்பதை நாம் உணர வேண்டும். நினைவாற்றல் என்பது ஒரு தனிமனிதனின் பார்வை மற்றும் அகநிலை எதார்த்தத்தால் வடிவமைக்கப்பட்ட ஒரு புரிதல் சார்ந்த செயலாகும். மிகவும் நேர்மையான சாட்சி கூட முழுமையற்ற அல்லது மனித உணர்வுகளால் சிறிது

மாற்றப்பட்ட வாக்குமூலத்தை அளிக்கக்கூடும் என்ற புரிதலுடன் ஆதாரங்களை மதிப்பீடு செய்வது நீதியின் தேவையாகும். எனவே, சாட்சியங்களின் சீரான தன்மைக்கும், மனித நினைவாற்றலின் இயல்பான குறைபாடுகளுக்கும் இடையே ஒரு கவனமான சமநிலையை பேண வேண்டும்.

13(v). அதனால், எதிரிதரப்பு குறுக்கு விசாரணையின்போது தேதியை மாற்றி கூறியதாலோ, காசோலை எண் சொல்லவில்லை என்ற சிறிய முரண்பாடுகளால் மட்டுமே வைத்து இவ்வழக்கில் புகார்தாரர் தரப்பு சாட்சியம் வழுவிழந்துவிட்டதாக இந்நீதிமன்றம் கருத இயலாது. ஆவணங்களை தாக்கல் செய்து இவ்வழக்கில் புகார்தாரர் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபித்துள்ளார் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

13(vi). மேலும், குற்றம் சாட்டப்பட்டவர் தரப்பில் புகார்தாரரின் குற்றச்சாட்டை மறுக்கும் விதமாக குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் சாட்சிகளை விசாரிக்க போதிய அவகாசம் கொடுத்தும், சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யாததால், குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் யாரும் விசாரிக்கப்படவில்லை.

13(vii). காசோலையில் உள்ள கையொப்பத்தை குற்றம் சாட்டப்பட்டவர் ஒப்புக்கொண்டால் பிரிவு 139ன் மாற்றுமுறை ஆவண சட்டத்தின் கீழ் அந்த காசோலை ஒரு சட்டபூர்வமான கடனுக்காகதான என்ற அனுமானம் (Presumption) தானகவே உருவாகிறது. அந்த அனுமானத்தை மறுக்க குற்றம்சாட்டப்பட்டவர் வெறும் கதைகளை சொல்லாமல் "சாத்தியக்கூறுகளின் முன்னுரிமை" (Preponderance of probilities) அடிப்படையில் வலுவான ஆதரங்களை சமர்ப்பிக்க வேண்டும்,

13(viii). இவ்வழக்கில் காசோலையில் உள்ள கையொப்பத்தை குற்றம் சாட்டப்பட்டவர் மறுக்காத பட்சத்தில் புகார்தாரர் அந்த காசோலையின் சட்டபூர்வமான உரிமையாளர் (Holder in due course) ஆவார். இவ்வழக்கில் எதிரி தரப்பில் காசோலையில் உள்ள

கையொப்பத்தையோ காசோலையோ மறுக்கவில்லை. குற்றம்சாட்டப்பட்டவருடையது அல்ல என்று நிரூபிக்க தவறிவிட்டது.

குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பில் பிரிவு 139 ன் கீழ் எதிரிக்கு சாதகமான அனுமானத்தை பொய்ப்பிக்க தவறிவிட்டது.

13(ix). மேலும், குற்றம் சாட்டப்பட்டவர்களிடம் 313(1)(b) கேள்வி கேட்டபோது குற்றம்சாட்டப்பட்டவர் பொய் சாட்சி, எங்கள் தரப்பில் சாட்சிகள் உண்டு என கூறியுள்ள நிலையில் குற்றம் சாட்டப்பட்டவர் அதை நிரூபிக்கும் வண்ணம் எவ்வித சாட்சியங்களோ சான்றாவணமோ இவ்வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது. மாண்புமிகு உச்சநீதிமன்ற வழக்கு ரங்கப்பா எதிர் ஸ்ரீமோகன் (2010) 11 SC வழக்கின்படி காசோலை வழங்கப்பட்டது ஒப்புக்கொள்ளப்பட்டாலோ அல்லது நிரூபிக்கப்பட்டாலோ விசாரணை நீதிமன்றம் திருப்பப்பட்ட காசோலையை உண்மையான சட்டப்பூர்வமான கடன் அல்லது நிறைவேற்ற கொடுக்கப்பட்டது என எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கூறுகிறது. மேலும், அவ்வாறு நிரூபிக்கப்பட்டால் அந்த அனுமானத்தை மறுத்து நிரூபிக்க வேண்டியது குற்றம்சாட்டப்பட்டவரின் கடமை என கூறுகிறது. இந்நிலையில் குற்றம் சாட்டப்பட்டவர் போதுமான சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

13(x). மேலும் வழக்கின் குற்றம்சாட்டப்பட்டவர் வழக்கு காசோலையானது என்னுடையது அல்ல என்றோ, காசோலையிலுள்ள கையெழுத்து என்னுடையது அல்ல என்றோ மறுப்பு ஏதும் தெரிவிக்கவில்லை. இந்த முதல் கேள்வியின் போது கூட பொய் வழக்கு என கூறியிருக்கிறாரே தவிர, வழக்கு காசோலையானது என்னுடையது அல்ல என்றோ அதில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல என்றோ குறிப்பிட்டு கூறவில்லை. மேலும், எதிரி தரப்பு வாதத்தின்போதும் இந்த வழக்கின் காசோலையாலுள்ள கையெழுத்து எதிரியுடையது அல்ல என்றும், பணம் பறிக்கும் நோக்கில் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என வாதிடப்பட்டுள்ளது. ஆனால்,

காசோலையிலுள்ள கையொப்பம் எதிரியுடையது அல்ல என்பதை எதிரி தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்க தவறிவிட்டது. இதன்மூலம் எதிரி புகார்தாரரிடம் சட்டப்பூர்வமான ஒரு கடனை பெற்றுள்ளார்கள் என்பதும், அந்த சட்டபூர்வமான கடனை நிறைவேற்றுவதற்காக காசோலை கொடுக்கப்பட்டுள்ளதாக இந்நீதிமன்றம் அனுமானிக்கிறது.

13(xi). குற்றமுறையீட்டாளர் தரப்பு சாட்சியம், குற்றமுறையீட்டாளர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட பு.த.சா.ஆ.1 முதல் பு.த.சா.ஆ.4 வரையுள்ள சான்றாவணங்கள் மூலம் குற்றமுறையீட்டாளர் தரப்பு வழக்கினை, குற்றமுறையீட்டாளர் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது. குற்றமுறையீட்டாளர் தரப்பில் குற்றஞ்சாட்டப்பட்டவர் மாற்றுமுறை ஆவண சட்ட பிரிவு 138 ன் கீழ் குற்றம் புரிந்திருப்பது நிரூபிக்கப்பட்டிருப்பதாக இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

13(xii). மேற்படி காரணங்கள், வழக்கின் பொருண்மைகள், சூழ்நிலைகள், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் ஆகியவற்றை கூர்ந்து பரிசீலனை செய்ததில், குற்றமுறையீட்டாளர் தரப்பில் குற்றஞ்சாட்டபட்டவர் மீது சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டு போதுமான சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி மெய்ப்பிக்கபட்டிருப்பதாக இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே குற்றஞ்சாட்டபட்டவர் மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 138ன் கீழ் குற்றவாளியாக இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது. எனவே, குற்றஞ்சாட்டப்பட்டவரை மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 138 ன் கீழ் தண்டித்து தீர்ப்பளிக்க இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

14. இவ்வழக்கில் குற்றமுறையீட்டாளருக்கு கு.வி.மு.ச பிரிவு 357 ன் கீழ் இழப்பீடு வழங்க கோரப்பட்டுள்ளது. இவ்வழக்கில் மாற்றுமுறை ஆவணச் சட்ட பிரிவு 138 ன் கீழ் குற்றஞ்சாட்டபட்டவர் குற்றவாளி என தீர்மானிக்கபட்டதினால் குற்றமுறையீட்டாளர் இழப்பீடு பெற தகுதி உடையவர் ஆவார். வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டும், குற்றமுறையீட்டாளருக்கு காசோலை தொகையான ரூ.5,00,000

+ செலவுத் தொகை ரூ.10,000/— மொத்தம் ரூ.5,10,000/—த்தை இழப்பீடாக குற்றமுறையீட்டாளருக்கு வழங்க உத்தரவிட இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

15. முடிவாக, குற்றஞ்சாட்டபட்டவர்கள் மாற்றுமுறை ஆவண சட்ட பிரிவு 138 ன் கீழ் குற்றவாளிகள் என தீர்மானிக்கபட்டு, மேற்படி குற்றத்திற்கு மூன்று மாத காலம் மெய்க்காவல் சிறை தண்டனை குற்றஞ்சாட்டபட்டவர் அனுபவிக்க வேண்டும் என்றும், குற்றஞ்சாட்டபட்டவர் (காசோலை தொகை ரூ.5,00,000 + செலவுத் தொகை ரூ.10,000) மொத்தம் ரூ.5,10,000/— குற்றமுறையீட்டாளருக்கு நஷ்டயீடாக கு.வி.மு.ச 357(3) ன் கீழ் ஒரு மாதத்திற்குள் செலுத்த வேண்டுமென்றும், தவறும் பட்சத்தில், மேலும், 2 மாதங்கள் மெய்க்காவல் சிறை தண்டனை குற்றஞ்சாட்டபட்டவர்கள் அனுபவிக்க வேண்டுமென்று கு.வி.மு.ச பிரிவு 255 (2) ன் கீழ் தண்டித்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் 2026 ஆம் வருடம் மே மாதம் 14 ஆம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிப்பார்க்கப்பட்டு, பின் அவையறிய பகரப்பட்டது.

ஓம்/—கா.ஸ்ரீபதி,
நீதித்துறை நடுவர்,
வாணியம்பாடி.

**இணைப்புகள்**

**குற்றமுறையிடுபவர் தரப்பு சாட்சிகள்**

| | | |
|---|---|---|
| 1. | பு.த.சா.1 | திரு.பாவேந்தன் |

**குற்றமுறையிடுபவர் தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| 1. | பு.த.சா.ஆ.1 | 10.09.2014ம் தேதியிட்ட கரூர் வைசியா வங்கி, திருப்பத்தூர் கிளையின் 503189 என்ற எண்ணுள்ள ரூ.5,00,000/-க்கான காசோலை அசல். |
| 2. | பு.த.சா.ஆ.2 | 18.10.2014ம் தேதியிட்ட கரூர் வைசியா வங்கி, வாணியம்பாடி கிளை அளித்த ரிட்டன் மெமோ . |
| 3. | பு.த.சா.ஆ.3 | 21.11.2014ம் தேதியிட்ட குற்றம் முறையிடுபவர் குற்றம் சாட்டப்பட்டவருக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு நகல். |
| 4. | பு.த.சா.ஆ.4 | 24.11.2014ம் தேதியிட்ட எதிரி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அலுவலகம் சார்ந்த அஞ்சல் ஒப்புகை அட்டை. |

**குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பு சாட்சி** – இல்லை.

**குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தரப்பு சான்றாவணங்கள்** – இல்லை.

**குறிப்பு**

1. வழக்கின் முடிவு குற்ற முறையீட்டாளருக்கு தெரிவிக்கப்பட்டது.
2. கு.வி.மு.ச பிரிவு 204ன் கீழ் எதிரிக்கு இலவசமாக தீர்ப்பின் நகல் வழங்கப்பட்டது.

ஒம்/–கா.ஸ்ரீபதி,
நீதித்துறை நடுவர்,
வாணியம்பாடி.

//உண்மை நகல்//

SRIPATHI K

JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI
Digitally signed by SRIPATHI K
Location: TIRUPATHUR

நீதித்துறை நடுவர்,
வாணியம்பாடி.